# ஆத்ம ஜோதி




★

அருள்மிகு
திருக்கேதீச்சரம்.

★

ஆடி
ஆவணி

1976

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்.


ஜோதி 28 | நள ௵ ஆடி-ஆவணி ௴—(14-8-76) உ | சுடர் 9-10


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| திருக்கேதீச்சரத் தோத்திரம் | — | 145 |
| திருக்கேதீஸ்வரர் அஷ்டகம் | — | 146 |
| ''எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம்'' | — | 147 |
| தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரம் | — | 154 |
| திருக்கேதீச்சரம் வாரீர்! | — | 158 |
| எனது இனிய நண்பர் | — | 161 |
| சமரச ஞானி | — | 168 |
| மாதோட்ட மருந்து | — | 170 |



### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள்சந்தா | 100—00 |
| வருடச்சந்தா | 10—00 |
| தனிப்பிரதி | 1—00 |

ஆசிரியர்: திரு. நா. முத்தையா

### ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]

# திருக்கேதீச்சரத் தோத்திரம்

(க. இராமச்சந்திரா அவர்கள்)

மூவர்க்கும் மேலான முதல்வன் கண்டீர்
முன்னின்று வழிகாட்டும் மூர்த்தி கண்டீர்
நாவலர்முன் நினைவூட்டும் நம்பன் கண்டீர்
நானற்றுர் உளம்பிரியா நாதன் கண்டீர்
பாவங்கள்தீர்த் தெம்மைப் பவித்ர ராக்கும்
பாலாவிக் கரையமர்ந்த பரமன் கண்டீர்
தேவர்க்கும் தெரிவரிய தெய்வம் கண்டீர்
திருக்கேதீச் சரத்துறையும் தேவன்தானே.

சுந்தரரின் பாடல்மகிழ் சுயம்பு லிங்கம்
சுழியலுக்கு வழிகாட்டும் சோதி லிங்கம்
கந்தருவற் கின்னரரும் போற்றும் லிங்கம்
கௌரியிட மாகஒளிர் காட்சி லிங்கம்
மந்திரமும் தந்திரமும் ஆன லிங்கம்
மாதோட்டந்தனில் அமர் மாணிக்க லிங்கம்
பந்தமறுத் தடியரையாள் பழைய லிங்கம்
பரமலிங்கந் தனைதொழுதால் பாவம் போமே.

வேதமுடன் ஆகமமும் ஆனுய் போற்றி
வேதாந்தச் சித்தாந்தப் பொருளே போற்றி
சூதமுனி புகழ்ந்துரைத்த சிவனே போற்றி
துவட்டாவின் கலிதீர்த்த தூயனே போற்றி
கேதுவந்து பூசித்த கோவே போற்றி
கேட்டவரம் ஈந்தருளும் கையா போற்றி
மாதொருபா கத்தமர்ந்த மணாளா போற்றி
மாதோட்ட மாமணியே போற்றி போற்றி

பொங்குகடல் சூழிலங்கைப் புனிதா போற்றி
புண்ணியர்தம் கண்ணின் மணியே போற்றி
சிங்கமன்னரும் பணிசெய் சிவனே போற்றி
சிரிப்பாலே திரிபுரத்தைச் செற்றுய் போற்றி
வங்கமுறை மாதோட்ட மருந்தே போற்றி
வடஈழ மக்களது வாழ்வே போற்றி
தெங்குநிறை சோலைமகிழ் தேவே போற்றி
திருக்கேதீச் சரத்தானே போற்றி போற்றி!

# திருக்கேதீஸ்வரர் அஷ்டகம்

(துவஷ்டா பாடியது)

நமஸ்தே சாம்ப ருத்ராய
நமஸ்தே பர மாத்மனே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

நமஸ்தே அகில நாதாய
நமஸ்தே பயநாசக
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோ நம:

ஆதிமத்யாந்த சூன்யாய
ஆதார நிலயாயச
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

ப்ரக்ஷ்ம விஷ்ணுஸ்வ ரூபாய
ஸ்ருஷ்டி ஸம்ரக்ஷ ஹேதவே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

உமார்த்த திவ்ய தேஹாய
காருண்ய வருணாலய
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

நமஸ்சுந்தர ரூபாய
சுந்தரீ ப்ராணநாயக
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

நமஸ்தே ஜகதாதர்ர
ஸ்மஸ் ஸிரஸி ஜாங்க்ரிணே
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

புத்ரம்தேஹி க்குருபாம் தேஹி
தேஹிஸ்த் பக்திமேவசி
சேதுமத்ய நிவாசாய
கேதீசாய நமோநம:

# "எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம்"

— ஆசிரியர் —

"எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம்" என்று பாடியவர் ஞானசம்பந்தப் பெருமான். ஞானசம்பந்தர் இறைவரைத் தந்தையாகப் பாவனை செய்து பக்தி செய்தவர். மூன்று வயதாக இருந்த போது திருத்தோணியப்பருடைய திருக்குளத்தின் கரையிலே உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றவர் ஞானசம்பந்தர். உமாதேவியார் ஞானத்தாய் ஆகிறபோது சிவபெருமான் ஞானத்தந்தை ஆகின்றார். அதனால் எந்தைகேதீச்சரம் என்கின்றார் சம்பந்தப்பெருமான். இதனைச் சேக்கிழார் பெருமான் தாம் பாடிய பெரிய புராணம் — திருஞான சம்பந்தருடைய புராணத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிதுமேவி
 ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
 மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
 திருக்கே தீச்சரத்து அண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
 உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார்.

கேதீச்சரத்து அண்ணல் எனக் குறிப்பிடும் பகுதி எமக்கெல்லாம் உள்ளத்திலே ஒரு உருக்கத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கை சிறியதானாலும் அது எல்லையில்லாத புகழை உடையது. அப்புகழுக்குக் காரணம் கேதீச்சரப்பெருமானுவார்.

முதன்முதல் விஜயன் இலங்கைக்கு வந்த போது இங்கு தமிழர்கள் நல்ல பண்பாட்டோடு வாழ்ந்திருந்ததைக் கண்டான். அப்பண்பாடுதான் அவர்கள் அநுட்டித்து வந்த சிவவழிபாடு ஆகும். இறைவழிபாட்டின் மூலம் மக்களிடையே ஒரு பாந்தவ்யத்தை ஏற்படுத்த விஜயன்

முயன்றான். தானும் அவர்களது மதத்தைச் சேர்ந்தவன் தான் என்பதை மக்கள் உள்ளத்திலே பதியச் செய்வதற்காக இலங்கையில் நாலு திசைகளிலும் நாற்பெருங்கோயில்களை அமைத்தான். விஜயன் அரசாட்சியை ஆரம்பிக்கு முன்பே தமது இராச்சியத்திற்கு தேவபலமும் அதன் மூலம் மக்கள் பலமும் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்துடையவனாக நாற்பெருந்திசைகளிலும் நாற்பெருங்கோயில்களை நான்கு பெரும் அரணாக அமைத்தான்.

''கீழ்த்திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலை நிறுவி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சரச்சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்தறையிற் சந்திரசேகரேச்சுரன் கோயிலை எழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைச்சாரலில் திருத்தம்பலை எனும்பதியிலே, திருத்தம்பலேச்சுரன், திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோயிலையுங் கட்டுவித்து, அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி காசியிலிருந்து பிராமணர்களையும் வரவழைத்தான்'' இச்செய்தி யாழ்ப்பாண வைபவமாலையிற் காணப்படுகின்றது.

சிங்கள மக்கள் இங்கு குடியேறுதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இங்குச் சிவவழிபாடு இருந்திருக்கிறது. மற்றைய கோயில்களையெல்லாம் கட்டுவித்த விஜயன் திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்தான் என்பதிலிருந்து திருக்கேதீச் சரத்துப் பழமையை ஓரளவு புரிந்து கொள்ளமுடிகின்றது. திருக்கேதீச்சர ஆலயம் கட்டப்பட்ட காலத்திலே உலகம் முழுவதிலும் சிவவழிபாடு பரவியிருந்துள்ளது. மற்றைய மதங்கள் தோன்றுதற்கு முன் உலகம் முழுவதிலும் ஒரே ஒரு வழிபாடுதான் இருந்துள்ளது. அதுதான் சிவவழிபாடு ஆகும்.

சிவலிங்கவழிபாடு உருவ வழிபாட்டினருக்கும் அருவ வழிபாட்டினருக்கும் அருஉருவ வழிபாட்டினருக்கும் பொதுவாக அமைந்துள்ளது. சிவவழிபாடுதான்

உலகம் முழுவதும் பரவியிருந்ததென்பதற்கு அடையாளங்கள் தற்போது ஆராய்ச்சியின் மூலம் தெளிவாகிக்கொண்டிருக்கின்றன. உலகத்தின் பல பாகங்களிலும் நிலஅகழ்வு செய்த ஆராய்ச்சியாளர்கள் அங்கங்கு சிவலிங்கங்களைக் கண்டெடுத்துள்ளார்கள்.

வியாச முனிவரிடத்திலே முறையாகப் புராணங்களைக் கேட்டவர் சூதமா முனிவர். யாகங்கள் நடைபெறும் இடங்களில் புராணப் பிரசங்கம் செய்பவர் சூத முனிவர். நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமா முனிவர் புராணப் பிரசங்கம் செய்யும் போது ஸ்காந்த புராணம் — தக்ஷிண கைலாச மான்மியம் இரண்டாம் அத்தியாயத்திலிருந்து திருக்கேதீச்சர மகிமையைப் பற்றிக் கூறியுள்ளார் என்றால் திருக்கேதீச்சரப் பழமையை எவ்வாறு கூறமுடியும்.

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் இடையில் சிறு பகை. அது பெரிய போட்டியாக வளர்ந்தது. நான் பெரியவன்; நீ சிறியவன் என்ற அகங்காரப்போட்டி. ஆதிசேடன் மகாமேருமலையின் சிகரங்களைத் தன் தலைகளால் மறைத்திருந்தான். வாயுதேவன் பலம் கொண்டமட்டும் வீசினன்; புயலை எழுப்பினன். இலகுவில் அசைக்கமுடியவில்லை. ஆதிசேடன் கயிலையிலுள்ள தனது தலைகளைத் தூக்கினன். வாயு இதனைத் தருணமாகக் கொண்டு கயிலையிலுள்ள மூன்று சிகரங்களைப் பிடுங்கி எறிந்தான். அவை மூன்றும் தெற்கே விழுந்தன. ஒன்று திரிகூடம்; அடுத்தது கந்தமாதனம், மூன்றாவது மாதோட்டத்தில் விழுந்து நிலத்தில் புதையுண்டது. அதுவே திருக்கேதீச்சரம். அதனைத் தென்கயிலாயம் என அழைத்தனர்.

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிர்தம் கடைந்தனர். அசுரர் மோகினிவசப்பட்டு அழிந்தனர். தேவர்கள் அமிர்தத்தைப் பங்கீடு செய்து உண்டனர். உயிர் தப்பிய ராகு, கேது, ஆகிய இரு அசுரர்களும் அமிர்தம்

உண்ணும் தேவர்களுடன்சேர்ந்துகொண்டனர். இருவரும் கள்ளமாக உண்டவர்களாகையால் கழுத்தறுபட்டனர். கேது தன் கொடுவினையைப் போக்க ஈழநாடடைந்து மாதோட்டத் திருத்தலத்தில் தவம் செய்து வினைநீங்கப் பெற்றான். இதனால் அத்தலம் கேதீச்சரம் ஆயிற்று.

மகாதுவட்டா ஒரு தெய்வச் சிற்பி. பிரமதேவருக்கு அடுத்தபடியாக நினைத்ததை நினைத்த உடனே படைக்கும் ஆற்றல் வாய்ந்தவன். கேதிச்சரநாதனை வழிபட்டு அருள் பெற்றான். கோயிலைச் சூழ அழகிய நகரம் ஒன்றை அமைத்தான். அது மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டு இன்று மாதோட்டம் என வழங்கப்பட்டு வருகின்றது. திருக்கேதிச்சர நாதர் மீது திருக்கேதீச்சுரர் அஷ்டகம்பாடி பரவிப் பணிந்து முத்தியும் பெற்றான்.

''கடிகமழ் பொழிலணி மாதோட்டம் கருத நின்ற கேதிச்சரம்''
''எழில்திகழ் மாதோட்டம் கேடிலாத கேதிச்சரம்''
''உயர்தரு மாதோட்டத்து அண்ணல் நண்ணுகேதீச்சரம்''
''மறிகடல் மாதோட்டத்து அடிகள் ஆதரித்து இருந்த கேதிச்சரம்''
''மலிகடல் மாதோட்டத்து எல்லையில் புகழ் எந்தை கேதிச்சரம்''
''மாதோட்டம் கேழல் வெண்மருப்பணிந்த நீள்மார்பர் கேதிச்சரம்''
''மஞ்ஞை நடமிடு மாதோட்டம் தொண்டர் நாள்தொறும் துதிசெய [அருள்செய் கேதிச்சரம்''
''மாதோட்டத்து உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு கேதிச்சரம்''
''மாதோட்ட நன்னகர் மன்னித் தேவிதன்னொடுந்திருந்து கேதிச்சரம்''
''மாதோட்டத்து அத்தர் மன்னுபாலாவியின் கரையிற் கேதிச்சரம்''
''மாதோட்டத்து ஆடல் ஏறுடை அண்ணல் கேதிச்சரம்''

ஞானச் சம்பந்தமூர்த்தி நாயனாரும்,

''மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல் கேதிச்சரத்தான்''

எனச் சுந்தரமூர்த்திநாயனாரும் புகழ்ந்து கூறியிருக்கும் பெற்றி நாம் நுனித்துணர வேண்டியவையாகும். மகாதுவட்டா கேதிச்சரநாதனுக்கும் கௌரி அம்பிகைக்கும் திருக்கோயில்கள் அமைத்து வழிபாடு செய்தான். எம்பெருமானுடைய திருக்காட்சி கிடைக்கப்பெற்றுப் புனிதனானான். நினக்கு யாதுவேண்டும் என்று எம்பெருமான் கேட்ட போது,

"அடியர் குற்றமும் குணமெனக்
கொண்டருள் அளகா!
கொடியர் முப்புரம் பொடிபட
விழித்தருள் குழகா!
படியர் விண்ணவர் பணிவுற
அருள்புரி பகவா
கடிய தொல்விடம் உண்டருள்
கண்ட! நின்சரணம்"

சரணுகதியே வேண்டி இன்பம் பெற்றுன் துவட்டா.

இராமன் இராவண சங்காரத்தின் பின் இலங்கா ராச்சியத்திற்கு அதிபதியாக விபீடணனுக்குமுடி சூட்டினுன். இராவணன் சிவபூஜை செய்தவன் ஆனபடியினுல் இராமனைப் பிரமகத்தி தொடர்ந்தது. அதனை இலங்கையிலேயே போக்கிக்கொள்ள இராமன் விரும்பினுன்.

முன்னேசுவரம் என்ற சிவத்தலத்தை அடைந்து பொன்லிங்கம் ஒன்று அமைத்து சிவபூசையைக் குறைவறச் செய்துமுடித்தார். பின் திருக்கோணேசுவரம் சென்று இரத்தினலிங்கம் அமைத்துப் பூசை செய்தார். அதன் பின் கேதீச்சரம் சென்று வெள்ளிலிங்கம் அமைத்து முறைப்படி பூஜை செய்தார். இராமபிரானுடைய பூஜைக்கு மனம் இரங்கிய கேதீச்சரப் பெருமான் கௌரி சமேதராகக் காட்சி கொடுத்து அவ்வெள்ளிலிங்கத்திலேயே மறைந்தருளினுர். ஸ்ரீ இராமபிரான் இராமேச்சுரம் சேர்ந்து மணலினுல் லிங்கம் அமைத்து வழிபட்டபோது பிரமகத்தி அவரை விட்டு நீங்கியது.

சிவபிரானது கட்டளைப்படி தெற்கு நோக்கி வந்த அகத்தியர் பொதியமலையில் சில நாட்கள் வீற்றிருந்தருளினுர். தவசித்தி அடையும் பொருட்டுச் சிவதலங்களை வணங்கிக்கொண்டு திருக்கேதீச்சரம் வந்து பாலாவியிலே நீராடி இறைவனைப் பணிந்தார். கேதீச்சரப் பெருமான் கௌரியம்மை சமேதராகக் காட்சிகொடுத்து முனிவரை ஆசீர்வதித்தார்.

கி. மு. 3-ம் நூற்றுண்டுக்கு முன் எழுதப்பட்ட கதிர் காமக் கல்வெட்டு ஒன்றில் பௌத்த ஆலய பரிபாலன முறையைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அவற்றை மீறி நடப்பவன் "மாதோட்டத்தில் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவாளுக" என்று கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து ஒரு பேருண்மை புலப்படுகின்றது. மாதோட்டம் ஒரு புண்ணிய தலம் என்பதை பௌத்தர்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள். சாதாரண இடத்திலும் சாதாரண நாளிலும் செய்யப்படும் பாவத்திலும் பார்க்க புண்ணிய தலத்திலும் புண்ணிய நாளிலும் செய்யப்படும் பாவம் மிகக்கொடியது என்பதும் பெறப்படுகின்றது. மாதோட்டத்தில் வாழ்ந்த பசுக்களைத் தேவர் எனவே போற்றி வந்தனர் நம்முன்னேர். யாழ்ப்பாணக் கிராமப் பகுதிகளில் வசித்த முன்னேர் மாதோட்டப் பகுதிக்குச் சென்று பசுக்களை விலைக்கு வாங்கி வந்தனர். அப்பசுக்களை அவர்கள் இலட்சுமியாக போற்றி வந்தார்கள்.

"யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை"

என்ற திருமூலர் திருவாக்கை கிராமப் பகுதிகளில் நம் முன்னேர் வெகுவாகக் கடைப்பிடித்து வந்துள்ளனர். அதனுல் நோய் நொடி வறுமை இன்றிச் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

இன்று மாதோட்டப் பகுதியிலே உள்ள பசுக்கள் இறைச்சிக்காக விற்கப்படுகின்றன. எப்படியும் பணம் சம்பாதிக்கலாம் என்ற மனேபாவம் மனிதனுடைய உள்ளத்திலே பதிந்துவிட்டது. ஆகவே பசுக்களைக் கொலை செய்யாதிருக்கச் சட்டம் கொண்டுவருவதற்காக இந்துக்களாகிய நாம் முன்னின்று முயற்சிக்கவேண்டும்.

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையாரின் நீண்டகால இடைவிடா முயற்சியினுல் 4-7-76 ஞாயிற்றுக்கிழமை

திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழா நடைபெற இருக்கிறது. தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் நடைபெற இருக்கின்றது. திருப்பணி இத்துடன் முடிந்து விடவில்லை. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

இத்திருக்குடத் திருமஞ்சனம் நடைபெறும் காலத்திலே வாழக் கொடுத்த நாம் பாக்கியசாலிகள். திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாவை கண்டு களிப்பவர்கள் மிகப் பாக்கியசாலிகள். அகக்கண்ணுற் கண்டு கேதீச்சரப் பெருமானை அல்லும் பகலும் வழிபடுபவர்கள் மிகமிகப் பாக்கியசாலிகள்.

---

## கேதீசர் துதி

கந்தரங் கறுத்த வையா கருணையே யுருவ மானேய்
கந்தவார் குழலி பாகா கருதுவார்க் கினிய நாதா
அந்தரர்க் கரிய சோதி யடியனேற் கினியா ருண்டோ
வந்தவென் துயர மாற்றேன் மாதோட்ட மணியே காவாய்.

—திருக்கேதீச்சரப்புராணம்

நல்லனவே நாளுமுயிர்க் கருள்வா ராகி
நயந்தருளே வடிவெடுத்து நடப்பாராகிப்
புல்லியவாம் பிறப்பிறப்பிற் பொருந்தா ராகிப்
புகலடைவார்க் கருள்புரிய வல்லா ராகும்
பல்லெழில்சே ரெந்தைபதி கேதீ சரத்தைப்
பகலிரவே யல்லலறப் பரவித் தாழும்
நல்லவரா மவரடியைத் தொழுவோர் தாமே
நானிலத்து நாம்வணங்கும் நாயன் மாரே.

—திருக்கேதீச்சரப்புராணம்

அறத்தினை வேண்டுவாரு மளவிலாப் பொருளொன் றேதுந்
திறத்தினை வேண்டுவாருஞ் செயிரிலா வின்ப மாருந்
திறத்தினை வேண்டி வாருந் திகழுமிம் மூன்றின் மேலப்
புறத்தினை வேண்டி வாரும் புகுமிடங் கேதீ சம்மே!

— திருக்கேதீச்சரப் புராணம்

# தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரம்

() முத்து ()

தெங்கு என்பது தென்னை மரத்தைக் குறிப்பது. தென்னையைக் கற்பகதரு என்பர். தேவர் உலகத்தில் காமதேனுவும் கற்பக தருவும் இருப்பது போல பூவுலகக் காமதேனு பசுவாகும். பூவுலகக் கற்பகதரு தென்னை மரமாகும். தென்னை பன்னிரண்டு மாதமும் பயன் கொடுப்பதால் அதற்கு இராச பயிர் என்றும் பெயர் உண்டு.

தேவர் உலகுக் கற்பகதருவும் காமதேனுவும் தம்மை அண்டினோருக்கு வேண்டியதை எல்லாம் வாரி வழங்குகின்றன. பசுவும் தென்னைமரமும் மனிதனிடத்திலே சிறிதாகப் பெற்றுக் கொண்டு மனிதனுக்குப் பெரிய பயன்களை எல்லாம் அளிக்கின்றன. காய்கறிகளில் நமக்கு வேண்டாதவற்றையும் வைக்கோலையும் தவிட்டையும் பசுவுக்குக் கொடுக்கின்றோம். நமக்குவேண்டாத பொருட்களைஉணவாகப் பெற்றுக் கொண்ட பசு நமக்கு இனிய பாலைத் தருகின்றது. நெற்பயிரில் அரிசியை நாம் எடுத்துக் கொள்கின்றோம். வேண்டாத அழுக்கு நீரை தென்னைமரத்து அடியில் கொட்டுகின்றோம். அதை ஏற்றுக்கொண்ட தென்னைமரம் இனிய இளநீரையும் சுவையான தேங்காயையும் நமக்கு அளிக்கின்றது.

மக்கள் ஒவ்வொருவரும் பசுவையும் தென்னையையும் போல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்திலிருந்து பெற்றுக் கொள்வது குறைவாகவும் சமூகத்திற்குக் கொடுப்பது கூடுதலாகவும் அமையத்தக்கதாக வாழவேண்டும். அதுதான் உண்மையான யக்ஞம் என்று சொல்லப்படுவது. அக்கினியை மூட்டி அதிலே ஆகுதிபண்ணுவதுமாத்திரம்தான் 'யக்ஞம்'

அல்ல. வாழ்க்கை முழுவதும் பிறர் நலனுக்காக மாறும் போதுதான் உண்மை யக்ஞம் ஆரம்பமாகின்றது.

இத்தகைய தென்னைமரச்சோலை சூழப்பெற்றது திருக் கேதீச்சரம். இது சுந்தரர் காலம். இன்று காலம் மாறி விட்டது. சூழலிலே தென்னை மரங்களை நாட்டிச் சோலை களாக்க வேண்டும். அதனால் உண்மையான தெய்வப்பணி விருத்தி அடையும். தலத்தைச் சுற்றி உண்மையான சைவ ஆசார சீலர்கள் குடியேற்றப்படவேண்டும். புனித நகர் என்பது அங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கையைப் பொறுத்ததே அல்லாமல் சட்டத்தைப் பொறுத்தது அன்று. ஒரு இடத்தைப் புனித நகர் என்று அரசினர் பிர கடனப்படுத்தலாம். அது புனித நகராக அமைவது அங் குள்ள மக்களின் வாழ்வைப் பொறுத்ததாகும்.

மனிதனுக்கு உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றுமே நோய்வாய்ப்படுவதுண்டு. உடல் நோயுற்றிருக்கும்போது உள்ளமும் வருந்த வேண்டியதே. உள்ளம் வருந்தினால் உயிர் தனித்திருக்க முடியாது. அடியார்கள் ஆண்டவனே கதி என்று வாழ்பவர்கள். தம்மை முற்றாக ஒப்படைத்து விடுவார்கள். உடல், பொருள், ஆவி மூன்றும் அவனுக்கே என்று அர்ப்பணம் செய்துவிடுவார்கள். "அன்றே என்றன் ஆவியும், உடலும், உள்ளம் எல்லாம், குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" என்பது மணிவாசகம்.

உண்மையான அடியார்கள், தம்மை முழுதாகவே ஆண்டவனிடம் ஒப்புக்கொடுத்தவர்கள், உடல் நோயுற்ற காலத்தில் வருத்தம் அடைவதில்லை. காரணம்:— ஆண்ட வன் முன்சென்று நீக்கிவிடுகின்றான். தனது அடியவர்கள் வருந்தப்பொறுத்துக் கொண்டிருக்கமாட்டாதவன் இறைவன்.

பாலைக்கொடுத்துச் சம்பந்தரையும், சூலையைக் கொடுத்து அப்பரையும், ஓலையைக் காட்டிச் சுந்தரரையும்,

நூலைக்காட்டி மணிவாசகரையும் ஆட்கொண்டவன் அல்லவா இறைவன். யார்யாரை எப்படி ஆட்கொள்ள வேண்டும் என்பது அவனுக்கேதான் தெரியும்.

மாதோட்டம் என்பது கடற்கரைப் பட்டினம். அது ஒரு காலத்திலே பெயர்பெற்ற துறைமுகப் பட்டினமாக விளங்கியது. மகாதுவட்டா என்னும் தெய்வச் சிற்பி கேதீச்சரப் பெருமானை வணங்கி அருள் பெற்று உய்ந்தான். அதனால் கோயிலைச் சுற்றித் தெய்வத் திருநகர் ஒன்றைச் சமைத்தான். மகாதுவட்டா சமைத்த நகர் ஆகையினாலே அது மாதோட்டம் ஆயிற்று.

மரக்கலங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டம் என்று குறிப்பிடுகின்றார். பல தேசங்களிலிருந்தும் கப்பல்கள் மூலம் பண்டங்கள் ஏற்றுமதியாவதும் இறக்குமதியாவதும் போலவே மக்களும் வருவதும் போவதுமாயிருந்தனர். பக்தர்கள் பலதேசங்களிலிருந்தும் வந்தனர். அதனால் அதுபக்தித் துறையாயிற்று. பக்தர்கள் பலர் ஒன்றுகூடும் இடமாதலினாலே அது நன்னகராயிற்று.

சிதம்பரம் என்றால் நடராஜப் பெருமான் கோயிலையும், பழனி என்றால் முருகப் பெருமான் கோயிலையும், மதுரை என்றால் மீனாட்சி அம்மன் கோயிலையும், கதிர்காமம் என்றால் கதிரை முருகன் கோயிலையும் குறிப்பது போலவே மாதோட்டம் என்றால் திருக்கேதீச்சர ஆலயத்தைக் குறிப்பதாயிற்று.

கேதீச்சரப் பெருமான் கௌரி அம்மையோடு சேர்ந்து காட்சிகொடுக்கும் தன்மையை ''பங்கஞ்செய்த மடவாளொடும்'' என்று குறிப்பிடுகின்றார். இறைவன் இறைவியின் வேறானவன் அல்லன் என்பதைக்காட்டவே இடப்பாகத்தை அம்மைக்குக் கொடுத்து அர்த்தநாரீச்சுர வடிவம் ஆனான். ஆகவே சக்தி வேறு, சிவம் வேறு அல்ல; சக்தியும் சிவமும் ஒன்றே. இருவரும் அபின்னமாக இருக்கும் நிலையினையே பங்கம் செய்த மடவாள் எனக்குறிப்பிட்டார்.

இறைவன் வேறு, திருவருள் வேறு அல்லவே. இரண்டும் ஒன்றேதான். நெருப்பும் சூடும் சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றே. பூவும் மணமும் சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றே. மணியும் ஒளியும் சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றே.

இதே போன்று இறைவனும் இறைவியும் சொல்லால் இரண்டாக இருப்பினும் பொருளால் ஒன்றே. இத்திருத் தலம் தீர்த்த விசேடமும் உடையது. கோயிலின் பக்கத்தே பாலாவித் தீர்த்தத்தோடு விளங்குவது.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்கு. மூன்றும் சிறப்புற்று விளங்குவது திருக்கேதீச்சரமாகும். குருவின் உபதேசம் பெற்று அதனைச் சாதனை செய்தவர்க்கே இறைவன் திருக் காட்சி கிடைக்கும் என்பது பொது நியதி. ஆனல் திருக் கேதீச்சரப் பெருமானைத் தரிசித்த கேது, மகாதுவட்டா, அகத்தியர், இராமர் முதலானோர் பெருமானைத் தரிசித்த மாத்திரத்திலேயே இறைவனது திருக்காட்சி கிடைத்த தாக நூல்கள் கூறுகின்றன. இப்பொருளை எல்லாம் தருவது சுந்தரர் பாடிய திருக்கேதீச்சரப்பதிகம் ஐந்தாவது பாடலாகும்-

"அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே"

தன் அடியார்கள் மேலனவாய், அவர்களது உடம்பிற் பொருந்துகின்ற நோய்களை முற்றக் களைந்தருள்பவனுகிய சிவபெருமான், மரக்கலங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த "மாதோட்டம்" என்னும் நல்ல நகரத்தில், தனது திருமேனியின் ஒருகூற்றை அழகு செய்கின்ற மங்கை ஒருத்தியுடன், பாலாவியாற்றின் கரைமேல் தென்னஞ்சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருப்பவனுகக் காணப்படுகின்றான்.

# திருப்பணி நிறைவு கண்ட திருக்குட முழுக்குகாண திருக்கேதீச்சரம் வாரீர்!

சி. கந்தசாமி — விவேகானந்த சபை, கொழும்பு.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூறுமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை யிவை சிவபூமியே.

எனச் சிறப்பாகத் திருமந்திரத்தில் கூறப்படும் ஈழ நாட்டில், கீர்த்தி வாய்ந்த அதிபுராதன சிவாலயங்கள் பலவுள. அவற்றுள் முக்கியமானது திருக்கேதீச்சரத் திருத் தலமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன மூன்றும் முறையாக அமைந்த பதி திருக்கேதீச்சரம். கேது, மயன், மகாதுவட்டா, மண்டோதரி, இராமன், அகத்தியர் முதலாம் பெருந் தவத்தோர்கள் குறை நீங்க வழிபட்டு அருள் பெற்றுய்ந்த வரலாறுடைய தலம் இதுவாகும். தேவர்கள் இங்கு அர்த்த சாமப் பூசை செய்வதாக ஓர் ஐதீகமும் உண்டு.

இந்நாட்டு ஆதிக் குடிகளாகிய நாகர்களது தலையாய வணக்கத் தலமாக விளங்கியதும் கேதீச்சரமேயாம். இத னுல் நாகநாதர் என்ற பழம் பெயர் ஒன்றும் கேதீச்சரப் பெருமானுக்கு உண்டு.

7ஆம், 8ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சிவானு பூதிச் செல்வர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமி களாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தேவாரத் திருப் பதிகங்கள் பாடப்பெற்ற பேரருள்மிக்க பெருஞ் சிவத்தலம் இதுவாகும். சோழரும் பாண்டியரும் திருப்பணிகள் பல

செய்தவும், வன்னிநாட்டரசரதும், யாழ்ப்பாணத்தரசரதும் இறை உணர்ச்சியால் நித்திய நைமித்தியங்கள் நியமமாகச் செய்து வளர்க்கப்பட்ட பெருமைக்கு உரியதுமான பெரும்பதி இதுவாகும். இத்திறச் சீருஞ் சிறப்பும் பழம் பெருமையும் மகிமையும் வாய்ந்த ஈழத்தமிழரின் இப் புண்ணிய திருத்தலம், காலச் சுழற்சியில் சிக்குண்டு சிதைவுற்று அழிந்து மண்மேடாகும் நிலை ஏற்பட்டது.

திருக்கேதீச்சரம் இருக்கும் இடம் "வன்னி நாடு" என்று கூறப்படும். இவ்வன்னி நாடு 3000 சதுர மைல் பரப்பளவு கொண்டதாகும். இவ் வன்னி நாட்டிலுஞ் சிறப்பாக திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் வேறும் பல திருத்தலங்கள் அக்காலத்தில் இருந்ததாகத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவர்கள் கூற்றுப்படி திருக்கேதீச்சரம் அந்நாளில் ஒரு கோயிற் பட்டினம் (City of Temples) என்பது ஆகும். அந்நாளில் இவ்வாலயக் கோட்டஞ் சிற்பத்தில் வல்ல தபதிகளுக்கு உறைவிடமாக இருந்ததாகவுங் கருதப்படுகிறது. இன்று காடு மண்டிக்கிடக்கும் வளமிக்க வன்னிப் பிரதேசத்தில் திருக்கேதீச்சரம் போன்று பல உன்னத சிவாலயங்கள் இருந்திருக்கின்றன என்பதும், அவை இன்று கண்ணுக்கு எட்டாது அழிந்தும், மறைந்துங் கிடக்கின்றன என்பதும் அகழ்வாராய்ச்சியாளர் தேற்றமாகும்.

இத் திருக்கேதீச்சரத் தலத்திற்கு வேறு எப் பாடல் பெற்ற சிவத்தலத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பொன்று உண்டு. அது,

கோயிலோ, உருவமோ, பூசையோ யாதொன்றுமே இன்றி மூன்று முழு நூற்றாண்டுகளுக்கு மேலான காலம், தமிழ் வேதமாகிய தேவாரத் திருவுருவில் மட்டுமே கேதீச்சரப் பெருமான் உறைந்திருந்தார் என்பதாம்.

இந்நிலைக்கு உள்ளாகி இருந்த இத்திருப்பதியின் பழைய இடத்தைக் கண்டறிந்து, அதில் கோயில் எடுத்துப் பழைமையை நிலைநாட்ட வேண்டுமென்ற முயற்சியில் முதல் முதல் ஈடுபட்டவர் 19ஆம் நூற்றாண்டில்

சைவத்தின் விடிவெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆவர். "மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உளது; அங்கு மருந்தொன்று மறைந்திருக்கின்றது அதனைச் சென்றடையுங்கள்" என அங்கிரச ஆண்டு, ஐப்பசி மாதம் (1872) சைவ உலகிற்கு விஞ்ஞாபனம் ஒன்றையும் நாவலர் பெருமான் விடுத்தார்கள்.

விஜய ஆண்டு கார்த்திகை 29ஆம் நாள்(13,121893) புதன்கிழமை, அவிட்ட நன் நாளில் பழைய கோவில் இருந்த இடத்தோடு கூடிய 43 ஏக்கர் 3 றூட் 33 பேர்ச் காடடைந்த நிலம் நாட்டுக் கோட்டை நகரத்தவராகிய சைவப் பெரியார் ராம அரு. அரு. பழனியப்பச் செட்டியார் அவர்களால் யாழ்ப்பாணக் கச்சேரியில் 3,100 ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

1894ஆம் ஆண்டு ஜனுவரி மாதத்தில் வண்ணை சைவத் திருவாளர் சி. த. மு. பசுபதிச் செட்டியார் மேற்கொண்ட முயற்சியால் ஜய ஆண்டு ஆனி முதலாம் நாள் (13-6-1894) புதன்கிழமையன்று, பழைய ஆலயம் இருந்த இடமும், தீர்த்தக்கிணறு ஒன்றும், பழைய ஆலயப் பிரதிட்டாலிங்கம் ஒன்றும் திருநந்தி, சோமாஸ்கந்தர், கணேசர் ஆகிய மூர்த்திகளது சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன.

இன்று கோயிலுள்ள இடத்தில் சிறு கோயில் ஒன்றைக் கட்டி நூதனப் பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு, சோபகிருது ஆண்டு ஆனித் திங்கள் 14ஆம் நாள் (28–6–1903) ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை சதுர்த்தசியும், அவிட்ட நட்சத்திரமும் கூடிய நன்நாளில் முதலாவது திருக்குட முழுக்குச் செய்யப்பட்டது. பின்னர் நித்திய பூஜைகள் செய்யப்படுவதற்கேற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டன. மேலும், தொடர்ந்து சில திருப்பணிகள் செய்யப்பட்டு கி. பி. 1910இல் இன்னொரு திருக்குடமுழுக்குஞ் செய்யப்பட்டது.

இப்புதிய ஆலயமும் பழுதடைந்து காடு மண்டிக் கிடந்ததனுல் இதனைப் புதுப்பிக்க வேண்டிய நிலை இந் நாட்டுச் சைவர்களுக்கு ஏற்படலாயிற்று. பல சைவப் பெரியோரின் பல ஆண்டு முயற்சியால் இந்நாட்டுச் சைவர் களை விழிப்படையச் செய்யவும், திருக்கேதீச்சரத்தைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்திற்காகவும், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்ற பெயரில் இயங்கி வந்த சைவ தாபனத்தின் தொண்டர்கள் சார்பில் 1948ஆம் ஆண்டு ஒக்டோபர் 3-ம் 4-ம் திகதிகளில் திருக்கேதீச்சரத்தில் சைவ மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

அம்மாநாட்டிற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்துந் தலைசான்ற சைவப்பெரியோர் பலர் வருகை தந்திருந்த னர். அன்று அங்கு கூடிய அம்மாநாடு, திருக்கேதீச்சரம் புனர்நிருமாணம் பெறவேண்டுமென்ற பெருவிழிப்புணர் வை நாடு முழுவதிலும் ஏற்படுத்தியது. அப்பெருவிருப்பை அடித்தளமாகக் கொண்டு 1948 ஐப்பசி 28ல், கொழும்பு பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் கோயிலில் கூட்டிய மன்றில் உதயமான சபைதான் இன்றைய திருக்கேதீச்சரம் ஆலயத் திருப்பணிச் சபையாகும். இத்திருப்பணிச் சபையா ரின் வேண்டுகோட்படி தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவா ளர்கள் மு. வைத்தியநாதஸ்தபதி, மு. செல்லக்கண்ணுஸ்தபதி ஆகியவர்களினுல் கோயிற் சிற்பாகம நூன் முறைப்படி வரைவு செய்யப்பட்டு, காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள், சைவப்பெரி யார் சு. சிவபாதசுந்தரம், கட்டடக்கலைஞர் வி. நரசிம்மன் ஆகியோரது அங்கீகாரம் பெற்ற வரைபடத்திற்கு அமை யச் சுவாமி அம்பாள் கோவிற் கருவறைகளும், அவற்றோ டிணைந்த அர்த்த மண்டபம் வரையான பகுதிகள் கருங்கற் திருப்பணியாகவும், விமானம், இராசகோபுரம், விநாயகர் முதலான பரிவார கோட்டங்கள் பலவும் கலவைக் கட் டாகவும், நாட்டின் நாற்றிசையோரதும், கடல் கடந்த நாடுகளாகிய மலேசியா, சிங்கப்பூர், தென்னுடு ஆகியவற்றி லுள்ளஅடியார்களதும் பெரும் பொருட்செலவில் ஐந்து

பேரறிவும் கண்களே கொள்ளும் வகையில் எழுந்திருக்கும் பெருங் கோயிலே ஆனி உக (4-7-76) இல் ஆண்டவன் சித்தப்படி மறைவல்லோரால் விதித்த நல்லோரையில் திருக்குட முழுக்குக் காண இருக்கிறதென்பதைத் திருவருள் விண்ணப்பமாகத் தெரியத் தருகின்றேம்.

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் கோவிலைப் பொறுப்பேற்ற பின்னர் திருப்பணி பல செய்து, 1952 ஆகஸ்ட் மாதத்தில் திருக்குட முழுக்கு ஒன்று செய்வித்தனர். பின்னர் ஆலயச் சுற்றில் பூமியின் அடியில் இருந்தும் எடுக்கப்பட்டபழைய மகாலிங்கத்தையும், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேசுரர் முதலான மூர்த்திகளையும், அந்தந்த மூர்த்திகளுக்குரிய இடங்களில் பிரதிட்டை செய்து 1-10-1960இல் இன்னேர் திருக்குட முழுக்குஞ் செய்வித்தனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், திருக்கேதீச்சர ஆலயப் புனர் நிருமாணத்தின் பொருட்டுத் திருப்பணிகள் பலவுஞ் செய்து, சிவனடி நிழற் சேர்ந்தோர் பலரையும் மானசீகமாக இந்நேரம் திருக்கேதீச்சரப்பெருமான் அம்பாள் நடுவிருத்தி, வாழ்த்தி வணங்குதலுடன், இன்று திருப்பணிகள் பல செய்து கொண்டிருப்போர்க்கும், இனிப் பல பெரும் பணிகளைச் செய்ய இருப்போர்க்கும் ஈறிலா நன்மை பெருக அருள் நெறி வந்தணையச் செய்ய வேண்டுமென கௌரி பங்கராகிய திருக்கேதீச்சரப் பெருமான் திருவடிகளைப் பல்கோடி தரந் தாழ்ந்தெழுந்து இறைஞ்சுகின்றேம்.

---

## மூர்த்தியின் திருநாமம்

ஈழக்கயிலாயநாதர் அல்லது தென்கயிலாயநாதர்: திருக்கயிலைச் சிகரங்களில் ஒன்று வாயுதேவனுல் ஈழப்பகுதியில் வந்து வீழ்ந்ததனுல் இப்பெயர் வந்தது.

கேதீச்சரநாதர்: நவக்கிரகங்களில் ஒன்றுன கேதுபகவான் பூசித்த காரணத்தால் வந்த பெயர்.

# எனது இனிய நண்பர்
# க. இராமச்சந்திரா அவர்கள்

(சுவாமி பிரணவானந்தா—மலேசியா)

ஈழத்தின் தவப் புதல்வர் சிவத்திரு க. இராமச்சந்திர ஞர் அவர்கள் 26—4—76 மாலை 7-30 மணிக்கு சிவபதம் அடைந்துவிட்டார்கள் என்ற செய்தி எமது கெழுதகை நண்பர் திரு. நா. முத்தையா அவர்கள் மூலம் அறிந்து மிக்க துயரத்தில் ஆழ்ந்தோம். ஸ்ரீலங்கா மக்களுக்கும், சமய ஆன்மீக உலகுக்கும் அவருடைய மறைவு பேரிழப் பாகும்.

எளியேனுக்கு பெரியார் இராமச்சந்திர ஞருடன் பல வருடங்களாகத் தொடர்பு உண்டு. முதன்முறையாக அவர்களைச் சந்திக்கின்ற பாக்கியம் 1958ம் ஆண்டு தமது மனைவியுடன் கோலாலம்பூருக்கு வருகை புரிந்திருந்த போது கிடைத்தது. ஒரு ஞாயிறு அன்று காலை விவேகா னந்த மண்டபத்தில் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் பிரார்த்தனை கூட்டத்தில் கேட்போர் நல்லுணர்வுபெறும் படி உரையாற்றினர்கள். அதில் அவர் கூறிய உருக்கமான சம்பவம் நினைவில் இருக்கிறது. 1936ம் ஆண்டு, இமயத் தில் ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பெற்ற ஜோதிர் மடத் தைத் தரிசிப்பதற்காகத் தாம் ரிஷிகேசம் போய்ச் சேர்ந் தார்களாம். அந்த யாத்திரையை தொடர்வதற்கு முன் சுவாமி சிவானந்தரைத் தரிசித்து அவர்களது அருளாசி யைப் பெற விரும்பினராம். சுவாமிகள் அப்போது ஒரு குகையில் தவத்திலிருந்த காலம். தினமும் சூரியோதயத் திற்கு குகையிலிருந்து சூரிய நமஸ்காரம் செய்வதற்கு வெளியே வரும்போது வந்திருக்கும் பக்தர்களுக்கும் தரி சனம் கொடுப்பார்களாம். அவ்வாறே தாமும் சுவாமி களின் ஆசியைப் பெற்றபின் அவர்கள் ஜோதிர் மடம் இருக்கும் திக்கை நோக்கி வழிபட்டால் போதும்; அங்கு

யாத்திரை போக வேண்டாம் என்று தடுத்துவிட்டார்களாம். பின் தாம் டில்லிக்குத் திரும்பிய போது அம்மகானின் தீர்க்க தரிசனத்தின் உண்மையை பத்திரிகைகளில் வந்த செய்தி நிரூபித்துவிட்டது என்று சொன்னூர்கள். தாம் பிரயாணம் செய்யவிருந்த விமானம் இமயத்தின் பள்ளத் தாக்கில் விழுந்து பிரயாணிகள் அனைவரும் இறந்து போயினர் என்பதே அச்செய்தியாகும். அதனுல் தமது இகலோக வாழ்வில் 40 வயதுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் சுவாமி சிவானந்தர் தமக்கு உவந்தளித்த வரப்பிரசாதம் என்று கூறி எல்லோரையும் உணர்ச்சிவசப்படுத்தினூர் நமது இராமச்சந்திரனூர். இந்த கோலாலம்பூர் சந்திப்பு பெரியார் அவர்களுக்கும் எளியேனுக்குமிடையில் நிலைத்த ஆன்மீக உறவை ஏற்படுத்திவிட்டது.

எளியேன் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட பின் முதன் முறையாக 1964ல் பாரத யாத்திரையை முடித்துக் கொண்டு கொழும்புக்குவர இருப்பதை தெரியப்படுத்திய போது அருட்பெரியார் இராமச்சந்திரனூருடைய தூண்டுதலின்பேரில் தெய்வீகவாழ்க்கை சங்கத்தில் பொது வரவேற்பைவிட முகத்துவாரம் அருணுசலேஸ்வரர் ஆலயம், இராமக்கிருஷ்ண மிஷன் முதலிய இடங்களிலும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. விமானத்திடலில் எளியேன் வந்திறங்கியபோது பெரியார் அவர்கள் உடல் நலக் குறைவினுல் படுக்கையிலிருப்பதாக நண்பர்கள் கூறினர். முதல் கூட்டம் தம்பையா சத்திரத்தில் நடந்தது. மூதாட்டி திருமதி தம்பையா அவர்கள் வரவேற்புரை கூறினூர்கள். அப்போது எதிர்பாராத வண்ணம் அருட்தந்தை இராமச்சந்திரனூர் கூட்டத்திற்குள் நுழைந்தார்கள். உடல் நலத்தைத் துச்சமென நினைத்து கூட்டத்திற்கு வந்து எளியேனை ஆசீர்வதித்து, பாராட்டி, பட்டிமண்டபம் ஏற்றி வைத்தார்கள். எளியேன் என்றும் மறக்கற்பாலதன்று இந்தத் தியாகச் செயலை.

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித்
தமராகக் கொளல்''

என்ற வள்ளுவரின் வாக்கமுதம் பெரியார் இராமச்சந்திரனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. சமயாச்சாரியர்கள், நாயன்மார்கள்உட்படவாழையடிவாழையென வந்த திருக்கூட்ட மரபில் வந்தவர்களைப் பற்றி நிறையப் படித்து உணர்ந்துள்ளவர்கள். ஆதிசங்கரரிடம் அவர்கள் கொண்டிருந்த பெருமதிப்புச் சொல்லுந்தரமன்று. அவ்வாறே இராமகிருஷ்ணர் — விவேகானந்தர் இடமும் பிற மதங்களைப் பற்றியும் நன்கு ஆய்ந்து அறிந்தவர்கள். இந்நூற்றுண்டில் தோன்றிய மகான்களை தேடிச் சென்று தரிசித்தும் வரவேற்றும் அவர்கள் பூரண ஆசியைப் பெற்றவர்கள்: மகாத்மா காந்தி யோகர் சுவாமிகள், சுவாமி இராமதாசர், ஸ்ரீ அரவிந்தர், பகவான் ரமணமகரிஷி, சுவாமி சிவானந்தர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வருட்குரவர்களின் ஆத்மீகத்தொடர்பு அப்பெரியாரின் வாழ்க்கையை மலரச் செய்தது, சமரச ஞானியாகவும் திகழச்செய்தது.

அருட்திரு இராமச்சந்திரனுருடைய புனித இல்லத்தில் பூஜை அறை ஒன்று உண்டு; ஏன் அதைக் கோவில் என்றே சொல்லலாம். அங்கு பெரிய மகான்களுடைய குருபூஜைகள் உரிய தேதிகளில்நடைபெறும். எளியேனையும் அழைத்து ஒரு குருபூஜையில் கலந்து கொண்டு 20 நிமிடம் பேசவைத்தார்கள். அதற்குமுன் பெரியாருடைய இரு பெண் குழந்தைகள் குறிப்பிட்ட தோத்திரப்பாக்களை இசையுடன் பாடி அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினர். அவ்வட்டாரத்தில் வதியும் பல சிங்களப் பெருமக்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்; அவர்களில் ஒருவரையே பேச்சுக்கு நன்றி கூற வைத்தார் நமது பெரியார்.

சிந்தை சொல் செயல் ஆகியவற்றில் ஒத்த பண்புடைய அருங்குணக்குன்று சிவத்திரு இராமச்சந்திரனர். சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் அவரிடம் பொருந்தியிருந்தன. கவிபாடும் திறமும்கூட. அவர் எழுதிய நூல்களுள் 'சமரசஞானக்கோவை' (Hinduism in a Nutshell)

'பெரியார் அர்ச்சனைமாலை' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ''ஆத்மஜோதி'' என்னும் அரிய சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராக ஆரம்பத்திலிருந்தே தொண்டாற்றி வந்துள்ளார்கள். பல வருடங்களாக அவர்கள் வெளியிட்டு வந்த உயர்தரமான ஆங்கில 'சமரச சஞ்சிகை' (Religious Digest) எல்லோருக்கும் தெரிந்ததே. சமாதானத்தின் தூதராக வெளிநாடுகளில் நடைபெற்ற ஆன்மீக–சமாதான மகாநாடுகளில் கலந்துகொண்டது மன்றி அத்தேசங்களிலுள்ள பல அறிஞர்களின் பரிச்சியத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளார். அவர்களுடைய ஆத்மீகப் பணி வீட்டில் ஆரம்பித்து நாட்டில் செறிந்து பின் உலக ரீதியாகப் பரந்துள்ளதைப் பார்க்கிறோம். சைவத்தில் தோன்றியவர் அதன் கோட்பாடுகளையும் சித்தாந்தத்தையும் இளமையிற் கற்றுக்கொண்டார். பின் ஷண்மதத்தையும் வேதாந்தத்தையும் ஆய்ந்தறிந்து அதன்மேற்பிற சமயங்களைப் பற்றியும் கற்று அனுபவவாயிலாகச் சிறந்த சமரசஞானியானார் எனப் பார்க்கிறோம். அத்தகைய பெரியவரை இல்லறத்துறவி என்று கூறலாம்: இல்லறஞானி என்பதே மேல்.

மறைந்தவர்களை நினைவூட்டுவதற்கு கல்வெட்டு, அல்லது சரமகவி பாடுவது தற்கால மரபாக வந்துள்ளது. அதில் பெருமளவுக்கு உள்ளதையும் இல்லாததையும் சேர்த்து வானளாவப் புகழ்வது முக்கிய அம்சம். அதை நினைத்துத்தான் சுந்தரர்,

> ''தம்மையே புகழ்ந்திச்சைபேசினும்
> சார்வினும் தொண்டர், தருகிலாப்
> பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
> புகலூர் பாடுமின் புலவீர்காள்''

என்று பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் அமரர் இராமச்சந்திரனுருக்குரிய ஞாபகச் சின்னம் சொல்லோவியமாக ஜீவதசையிலிருக்கும்

போதே வெளி வந்துவிட்டது. ஆத்மஜோதி நிர்வாக ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் எழுதிய "இலங்கையில் ஓர் இல்லற ஞானி" என்னும் சிவத்திரு. க. இராமச்சந்திரனின் வாழ்க்கை வரலாற்று நூலினை இங்கு குறிப்பிடுகின்றேன்.

சென்ற ஆண்டு முற்பகுதியில் அந்நூலின் பிரதி ஒன்று அருட் பெரியார் எளியேனுக்கு அனுப்பி வைத்தார்கள். அதனை அப்போது மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு ஒருபுறம் வைத்துவிட்டேன். இப்போது படித்துப் பார்த்தேன். அமரர் இராமச்சந்திரனின் வாழ்க்கை வரலாற்றினை நிறைவானவற்றுடன் குறைகளையும் சேர்த்து சித்தரித்துக் காட்டுகின்றது இந்நூல். சேர்க்க வேண்டியது அவரது இறுதி நாட்களைப்பற்றிய குறிப்புகள். பின் இந்நூல் அப்பெருமகனுக்கு ஏற்ற ஒப்பற்ற நினைவாஞ்சலியாகுமெனக் கருதுகிறேன். ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் அனைத்துலகத் தலைவர் பூஜ்ய சுவாமி சிதானந்த மகராஜ் அவர்களின் முன்னுரையுடன் வெளி வந்துள்ளது ''இலங்கையில் ஓர் இல்லற ஞானி'' என்ற நூல். இதன் ஆக்கியோன் திரு. நா. முத்தையா அவர்களைப் பாராட்டுகிறேன். சிவத்திரு. இராமச் சந்திரனின் புனித ஆத்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக.

''இறைவன் அருட்குடைக்கீழ் எல்லாரும் இன்ப நிறைவெய்தி வாழ்க நிதம்!''

---

## மூர்த்தியின் திருநாமம்

மகாதுவட்டாபுரநாதர்: தேவத்தச்சனாகிய மகாதுவட்டா பூசித்துத் திருப்பணி புரிந்து அமைத்த காரணத்தால் வந்த பெயர்.

கௌரிநாதர்: உமாதேவியாரே இங்குக் கௌரி அம்மை என்ற திருநாமத்துடன் இடப்பாகத்தில் எழுந்தருளிய காரணத்தால் இப்பெயர் வந்தது.

## சமரச ஞானி

(சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள் — கொழும்பு.)

அருளாளர் திரு. க. இராமச்சந்திரா அவர்களை ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன் பேலூர் மடத்திற் பார்த்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. கண்டபோதே 'ஈழமாதா ஈன்றெடுத்த அருட்புதல்வர்களுள் ஒருவர் இவர்' என்று அறிந்து கொள்ளமுடிந்தது.

எமது இராமகிருஷ்ண மிஷனுக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பலமுறை எங்கள் மிஷன் மண்டபத்தில் அருளுரைகள் வழங்கியுள்ளார். இராம கிருஷ்ண நிலையங்கள் பலவற்றிற்கு யாத்திரை செய்து அந்நிலையங்கள் ஆற்றிவரும் அருந்தொண்டுகளைப் பாராட்டியுள்ளார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், அன்னை ஸ்ரீசாரதா தேவியாரும் அவதரித்த திருத்தலங்களாகிய கமார்ப்புகூர், ஜயராம்பதி ஆகிய இடங்களைத் தரிசித்து அவ்விடங்களில் அவர்களுடைய திருக்காட்சியை அகமுகமாகப் பெற்றுப் பரவசமடைந்தமை பற்றி அவரே கூறக் கேட்டுள்ளோம். குருதேவர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்த ஜி மஹராஜ் இவர்கள் மேற்பாடியுள்ள திருத்தாண்டகங்களும், அர்ச்சனை மாலைகளும் இவர் அவர்களிடத்துக் கொண்டிருந்த பக்திப் பெருக்கின் வெளிப்பாடுகளேயாம்.
இவரது பாடல்களில்:

"தாய் போலத் தரணியை ஆள் தயாளன் றன்னைத்
தக்ஷிணேஸ்வரத்தி லென்றும் காணலாமே" என்றும்

சாரதையாம் திருநாமம் படைத்துளாளைச்
சரண் புகுவார் சாந்திநிலை யடைவர் தாமே'' என்றும்
வரும் பகுதிகள் படிப்போர் உள்ளங்களை உருக்கவல்லன.

வாழ்வாகிய நீண்ட யாத்திரையை நினைந்து போலும் இவர் இந்திய புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றிற்கும் பல முறை யாத்திரை செய்துள்ளார். மேற்கொண்ட யாத்திரைகளின் பயனாய் பல மகான்களைச் சந்தித்து அவர்கள் அநுக்கிரகத்தால் ஆத்மீக விழிப்புப் பெற்றார். தான் பெற்ற அருளநுபவம் ஈழத்துச் சகோதரரும் பெறவேண்டும் என்ற ஆர்வத்தால் அம்மகான்களுட்பலரை நம் நாட்டவரும் அம்மகான்களின் அருளாசி பெற வழி

செய்தார். உலக நாடுகள் பலவற்றிற்கும் யாத்திரை செய்து ஆங்காங்கு பல சமயப் பேருரைகள் நிகழ்த்தினார். இப்பேருரைகள் இந்து மதத்தின் உயர்ந்த கருத்துக்களை அந்நாட்டவர் உணரவும், அவர்களுட் பலர் இந்துமதவழி ஒழுகும் பேரார்வத்தைப் பெறவும் தூண்டின. உலக யாத்திரைகளின் பயனாக வெளிவந்ததே 'சமாதான யாத்திரை' (Pilgrims of Peace) என்னும் நூலாகும்.

இந்துமத சாஸ்திரங்களுள் முதல் நூலாகிய வேதம் ''உள்ளது ஒன்று, அதை மகான்கள் பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்'' (ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி) என்று கூறுகிறது. இந்த சமரச ஞானத்தை முதன் முதலாக சாதனையிற் கடைப்பிடித்த நமது குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் வழிநின்று, சமரசத்தையே தனது வாழ்வின் மூச்சாகக் கொண்டு தனது எண்ணத்தால், சொல்லால், செயலால் இதனை உலகிற் பரப்பினார்.

சமரசக் கருத்துக்கள் பொதிந்த 'ஆத்மஜோதி' 'றிலிஜஸ் டைஜெஸ்ற்' (Religious Digest) என்ற தமிழ், ஆங்கில சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து அருந்தொண்டாற்றினார். இவரது கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய 'சமரச ஞானக் கோவை' ஆத்மீக தாகமுடையார்க்கு ஓர் அருமருந்து. கத்தோலிக்க சந்நியாச சகோதரிகளுக்கு இவர் செய்த சொற்பொழிவுகள் அடங்கிய நூலாகிய 'கோதினுட் பொதிந்த இந்துமதம்' (Hiduism in a Nut Shell) என்ற நூல் இந்துமதம் பற்றி சுருக்கமான, தெளிவான அறிவைப் பெறவிரும்புவோருக்குச் சிறந்த ஒரு கருவூலம். இவர் பரப்பிய சமரச ஞானக் கருத்துக்கள் பிறமதத்தவரிடையேயும் இவரைப் பெருஞ் செல்வாக்குப் பெற வைத்ததோடு, அவர்களிடையே மதம் பற்றிய ஒரு புதிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும் துணை புரிந்தது.

இல்வாழ்வை எவ்வாறு அறவாழ்வாக, அருள்வாழ்வாக மாற்றி அமரத்துவம் அடையலாம் என்பதை உலகுக்குக் காட்டிய ஒரு இலட்சிய புருஷர் இவர்.

இவரது பூதஉடல் மறைந்தாலும் இவருடைய இலட்சியங்கள் நம்மவர் மத்தியில் நிலைத்து அவர்கள் பெருவாழ்வு வாழ உதவுவனவாகுக.

# மாதோட்ட மருந்து

—நா. முத்தையா—

"கதிரைமலையில் மருந்தொன்றிருக்குது — அதைக்
கண்டாலே கலிதீரும்"

என்றொரு பாடலை நான் சிறுவனாக இருந்த போது பல முறை கேட்டுக் கேட்டு நானே பலமுறைபாடி அனுபவித்ததுண்டு. அதே காலத்தில் நம்மவர் பலர் மாதோட்டம் சென்று நெல்லும் மாடும் வாங்கிவந்ததையும் கேட்டதுண்டு; கண்டதுண்டு. மாதோட்டத்தில் மருந்தைப் பற்றியோ அன்றி மாதோட்டத்துத் தேன் பொந்தைப் பற்றியோ கேள்விப்பட்டதில்லை.

ஆனால் திருக்கேதீச்சரம், திருக்கேதீச்சரம் என்று எப்பொழுதாவது சிலருடைய நாவில் உச்சரிக்கப்படுவதைக் கேட்டதுண்டு. ஆனால் அது எங்கே இருக்கிறது என்பதையோ எங்கே இருந்தது என்பதையோ பலர் அறியார். நீண்ட நாட்களாக அது இந்தியாவிலுள்ள பாடல் பெற்றதலங்களுள் ஒன்று என்று தான் எனது மனத்தில் ஓர் பதிவு. என்னைப்போலத்தான் பலரும் நம்பியிருந்ததாக அவர்தம் அநுபவங்களைக் கூறும் போது கேள்விப் பட்டேன். ஊமையர் கூட்டத்திலே உளறுவாயன் மேலானவன் என்று கூறுவது போல என்னைப் போன்ற ஊமையர் கூட்டத்திலே நான் ஓர் உளறு வாயன் என்று என் மனத்தைத் திருப்திப் படுத்திக்கொண்டேன்.

இந்நிலையிலேதான் ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கேதீச்சரத்தில் மூன்று நாட்களுக்கு அந்தர் யோகம் நடக்க இருப்பதாகவும் அதில் வந்து கலந்து கொள்ளுமாறும் அமரர் க. இராமச்சந்திரா அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வந்த கொழும்பு சத்சங்கத்தினரிடமிருந்து ஒரு அழைப்பைப் பெற்றேன். அந்த அழைப்புத்தான் எனது கண்களை விழிக்கச் செய்தது. அந்த விழிப்பிலேதான் திருக்கேதீச்சரம் இலங்கையிலேதான் உள்ளது; அதுவும் மன்னாருக்கணித்தாக உள்ள

மாதோட்டத்தில் உள்ளது; என்ற பேருண்மை புலனாகியது. அந்த அந்தர் யோகத்தில் பங்கு பெறும் வாய்ப்பு அடியேனுக்கும் கிடைத்தது.

அந்தர் யோகத்தில் பங்குபற்ற எமக்கெல்லாம் நல்வழி காட்ட பாரதத்தில் இருந்து மூன்று மணிகள் வந்திருந்தார்கள். ஒருவர் உருவத்தில் அகத்தியராயினும் அறிவில் அகத்தியரை விஞ்சக்கூடிய அறிவு படைத்த பாலயோகி இராமதாசர் அவர்கள். இன்னொருவர் தன்னைப் பித்துக்குளி என்றே அழைத்துக்கொண்டு தனது இனிய கானத்தால் மற்றவர்களை எல்லாம் பித்துக்குளியாக்கும் முருகதாசர் அவர்கள். மற்றவர் சூதமுனிவரைப் போன்று புராணப் பிரசங்கத்தில் வல்லவரான சுகப்பிரமம் அவர்கள். இந்த அந்தர் யோகத்தில் இலங்கை முழுவதிலும் பரவலாக உள்ள ஆத்மீக சாதகர்கள் பலர் கலந்துகொண்டார்கள். சமையல் போன்ற காரியங்களை எல்லாம் அந்தர் யோகத்தில் கலந்து கொள்ள வந்த மெய்யடியார்களே பகிர்ந்து எடுத்துக்கொண்டார்கள். பாரதத்திலிருந்துவந்த மூவரும்தாம் அடைந்த ஞானத்தாலும் பக்தியாலும்பங்கு பற்றியோர் அத்தனை பேரையும் புதியதோர் மேலான உலகிலே சஞ்சரிக்கச்செய்தார்கள். இந்த அந்தர் யோகத்தில் பெற்ற அநுபவத்தின் பின்னரே 'மாதோட்டக்கனி' என்றும் 'மாதோட்ட மருந்து' என்றும் 'மாதோட்ட மணி' என்றும் போற்றப் பெறும் திருக்கேதீச்சரப் பெருமையை என்னைப் போன்ற சிலர் உணர்ந்துகொள்ள முடிந்தது.

முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சரத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை யாவரும் அறிவர். சமயபாடப் பரீட்சை வினாப் பத்திரங்களில் திருக்கேதீச்சரம் சம்பந்தமான ஒரு வினாவாவது தவறாது இடம்பெறத் தக்க அளவுக்கு சைவர்கள் மத்தியிலே திருக்கேதீச்சரம் இடம்பெற்றுவிட்டது. உலகு எங்கிலும் உள்ள சைவர்கள் திருக்கேதீச்சரம் நோக்கி யாத்திரை செய்ய முற்பட்டு விட்டனர். முன்பெல்லாம் பாரத நாட்டிலிருந்து ஈழத்திற்கு வரும் யாத்திரிகர்கள், கதிர்காமயாத்திரையே தமது முக்கிய குறிக்கோள் என்று சொல்லிவந்தார்கள். தற்பொழுதோ இராமேசுவர யாத்திரை முடிந்ததும் திருக்கேதீச்சர யாத்திரை செல்ல வேண்டும் என்று சொல்லும் அளவுக்குத்

திருக்கேதீச்சரம் சிவனடியார் திரு உள்ளங்களில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

மக்களுடைய உள்ளத்தில் பக்தி வளர்ந்த அளவுக்கு கோயில் திருப்பணி வேலைகளும் வளர்ந்து கொண்டே வந்தன. அது வளர்ந்து வளர்ந்து தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. 4-7-76 ஞாயிற்றுக்கிழமை அருள் விளங்கு திருக்கேதீச்சரப் பெருமான் திருக்கோயில் ஜீரணோத்த அட்டபந்தன திருக்குடத் திருமஞ்சனப் பெரு விழா நடைபெற இருக்கிறது. அன்றையத் தினம் காலை 9-25 மணிக்கு கேதீச்சரப்பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. அந்த நேரத்தில் உலகிலுள்ள சைவப் பெருமக்களின் உள்ளம் எல்லாம் கேதீச்சரப் பெருமானின் திசைநோக்கி தொழுதுகொண்டிருக்கும். நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, அன்பர் உள்ளம் எல்லாம் உணர்ச்சிவசமாகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நிற்பார்கள்.

நேரில் சென்று தரிக்க விரும்பும் அடியார்கள், பல தலங்களில் சென்று தரிசிக்கும் பரிவாரமூர்த்திகளை ஒரே இடத்தில் தரிசிக்கும் பேறு பெறுவார்கள். உலகெங்கும் யாத்திரை செய்து அதனாற் பெறும்பயனை எந்த ஒரு இடத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ளலாமோ அந்த இடம் திருகேதீச்சரமாக இன்று அமைந்துவிட்டது. ஈழத்துச் சைவர்கள் வாழ்வில் ஒருமுறையாவது கேதீச்சரப்பெருமானை அடைந்து மனம் உருகி நிற்பாராயின், ஈழத்திலுள்ள திருத்தலங்கள் அத்தனைக்கும் யாத்திரை செய்த பெரும்பயனைப் பெறுவார்கள்.

யாத்திரை செய்து அதன் பயனைப் பெற விரும்பும் மெய்யடியார்களுக்கு முன்னறிவாக இருக்கும் பொருட்டு கோயில் அமைப்பைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

சிவ ஆகமங்களிலே கூறப்பட்ட சிற்பசாஸ்திரகோயில் அமைப்பின்படி விக்கிரகங்கள் பிரதிஷ்டை பண்ணுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஈசான சிவாச்சாரியாருடைய ஆலோசனையின்படி பாரத நாட்டுச் சிற்பசாஸ்திர நிபுணர் நரசிம்மன் அவர்

களுடைய மேற்பார்வையில் காலஞ் சென்ற வைத்திய நாதஸ்தபதி அவர்களாலும் செல்லக்கண்ணுஸ்தபதி அவர்களாலும் படம் வரையப்பட்டு செல்லக்கண்ணு ஸ்தபதி அவர்களுடைய மேற்பார்வையில் திருப்பணி வேலைகள் இராப்பகலாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**கற்பக் கிருகம்:—** கோஷ்ட விக்கிரகம் தென்புறப்பார்வையில் தட்சணுமூர்த்தி. மேற்குத்திசையில் லிங்கோற்பவமூர்த்தி. வடக்குத் திசையில் பிரம்மா.

**முகமண்டபம் அல்லது அர்த்த மண்டபம்:**

தெற்குத் திசையில் நர்த்தனகணபதி; வடக்குத்திசையில் துர்க்கை மகாமண்டபமும், நிர்த்தமண்டபமும் தற்காலிகமாக கட்டப்பட்டவை. நீராழிமண்டபம் இன்னும் கட்டப்படவில்லை. சண்டிகேசர் கோயில் மூடிய கருங்கல் வேலையாகும். விமானங்கள் சுதை வேலையாகும். "நிறங்களோரைந்துடையாய்" என்பதற்கேற்ப விமானங்கள் பஞ்சவர்ணங்களால் தீட்டப்பெற்றுள்ளன. இவை ஐந்து திருமுகத்தையும், ஐந்து நிறங்களையும், ஐந்து தொழில்களையும் எமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கும். இந்த வர்ணங்கள் இந்தியாவில் இருந்து வரைவழைக்கப்பட்டவையாகும்.

மூலவர் பழைய விக்கிரகமாகும். சண்டிகேசர், சுவாசனமூர்த்தி, உமாமகேசுவரார், புதிய விக்கிரகங்களாகும். இதுவரை கொடிக்கம்பம் நாட்டப்படவில்லை. நந்தி, பலிபீடம் என்பன சுவாமிலிங்கத்திற்குப், கோயில் அமைப்புக்கும் ஏற்றதாக அமைந்துள்ளதோடு 33 அடி உயரமான கொடித்தம்பமும் நாட்டப் பெற்றுள்ளது. 33 அடி உயரமும் ஒரே தேக்கமரமாக அமைந்துள்ளமை கொடிமரத்தின் இன்னோர் சிறப்பாகும். கௌரி அம்பாள் சந்நிதியிலும் பலிபீடமும் நந்தியும் அமைக்கப்பட்டுள்ளன. பழைய நந்தியும் பலிபீடமும் இராசகோபுரத்திற்கு முன்னால் தனி மண்டபம் அமைக்கப்பெற்று இரண்டாம் பிரகாரத்தில் இடம் பெறுகின்றன.

நடராஜர் சந்நிதியில் தெற்குப் பக்கத்தில் உள் பிரகாரத்தில் 63 நாயன்மார்களும் அமைந்து திருவாரூரில் உள்ள தேவாசிரிய மண்டபம் போன்று விளங்குகின்றது. பதிகம் பாடிய சம்பந்தர், பதிகம் பாடிய சுந்தரர், சேக்கிழார், சந்தனுசாரியார் இவர்களுக்கெல்லாம் தனித்தனி

இடங்கள் உண்டு. துவாரகணபதி, துவார சுப்ரமணியர் என்போரும் இடம்பெறுகின்றனர். நவக்கிரகங்கள், சனீஸ்வரன் ஆதியன புதிய விக்கிரகங்களாக அமைந்துள்ளன. அதிகார நந்தி இராசகோபுரத்தின் உட்புறமுள்ள கோஷ்டத்தில் இடம் பெறுகின்றது. புதிய பஞ்சலோக விக்கிரகமாக அமைந்தது சோமஸ்கந்த திருமூர்த்தம். துவாரபாலகர் துவாரசக்தி சிலாவிக்கிரகங்களாக அமைந்துள்ளன. துவாரபாலகர் 6 அடி உயரமுடைய தாய்ச் சோழ சிற்பப்பாணியில் அமைந்துள்ளது. தெட்சணு மூர்த்தி 4½ அடி உயரம் உடையதாய் எல்லா இலட்சணங்களும் பொருந்த புன்சிரிப்பு தவழும் முகத்துடன் கல்லால விருட்சத்தின்கீழ் முயலகன்மேல் விளங்குகின்ருர்.

துவாரபாலகர் தெட்சணுமூர்த்தி ஆகிய இரு விக்கிரகங்களும் இங்கு அமைந்தது போல இந்தியாவில்கூட எவ்விடத்திலும் அமையவில்லை என்பது தென்னிந்திய சிற்ப சாஸ்திரவிற்பன்னரானஸ்ரீனிவாசன் அவர்களுடைய அபிப்பிராயம் ஆகும். புதிய சிலாவிக்கிரகங்கள் தென்னிந்திய அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலையங்களின் கண்காணிப்பாளரான திரு. வை. கணபதி அவர்களின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டன. கணபதி அவர்கள் வைத்திய நாதஸ்தபதி அவர்களின் மகனுவார். தந்தையும் மகனும் அகில இந்திய ஜனுதிபதி அவர்களால் அளிக்கப்பட்ட பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர்கள். வள்ளுவர் கோட்டம், பூம்புகார் இரண்டும் கணபதி அவர்களுடைய மேற்பார்வையிலேயே நடைபெற்றன.

பஞ்சலோக விக்கிரகங்களை கும்பகோணம் ஸ்ரீதேவி சிற்பசாலை உரிமையாளர் ஆர். ஜெகந்நாதஸ்தபதிகள், ஜெ. அருணஜடேஸ்வரர்ஸ்தபதிகள், ஜெ. சிவசங்கரன் ஸ்தபதிகள் ஆகிய மூவரும் திருக்கேதீஸ்வரம் வந்து செய்துகொண்டிருக்கின்ருர்கள். ஜெகந்நாத ஸ்தபதி அவர்களுக்கு 1970இலும் அவரது தந்தையான இராமசாமி ஸ்தபதி அவர்களுக்கு 1966இலும் ஜனுதிபதி விருது அளிக்கப்பட்டது. அகில இந்தியாவிலும் வெண்கலச் சிலாவிக்கிரகங்கள் செய்வதில் இவர்களே பேர்போனவர்களாவர். முன்னேஸ்வரத்தில் உள்ள பிச்சாடன விக்கிரகம் 1955ல் ஜெகந்நாத ஸ்தபதி அவர்களின் தந்தையாரான குருசாமி ஸ்தபதி அவர்களால் செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்

பிடத்தக்கது. தஞ்சாவூர்க் கோயிலுக்கு வெளியே உள்ள இராஜராஜ சோழனின் வெண்கலச் சிலை ஜெகந்நாதாச்சாரி அவர்களின் கைவண்ணத்தில் அமைந்தது என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

திருமுறைக்கு என்று தனியான ஒரு கோயில் சமைக்கப்பட்டுள்ளது. திருக்கேதீசுவரப்பெருமான் ஒரு நூற்றுண்டுக்கு மேலாகத் திருமுறைகளிலேயே வாழ்ந்து கொண்டிருந்தார் என்பது வரலாற்று உண்மையாகும். அத்தகைய பெருமானுக்கு திருமுறைக் கோயில் அவசியமானதும் பொருத்தமானதுமாகும். இக்கோயிலில் இடம் பெறுவதற்காக பன்னிரு திருமுறைகளும் கலிக்கோவில் அமைந்ததாக திருப்பனந்தாள் மகா சந்நிதானம் அவர்களால் தேவஸ்தானத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணிகளுக்கெல்லாம் மூலகாரணராய் ஓடி ஆடி உழைத்துக்கொண்டிருப்பவரும் திருப்பணிச்சபையின் கௌரவகாரியதரிசியுமான திரு. இ. நமசிவாயம் அவர்கள் ஆகமங்களுக்கும் கோயில் இங்கு அமைக்க இருப்பதாக மிக மகிழ்வோடு கூறினார்கள். தகுந்த சந்தர்ப்பத்தில் திரு. இ. நமசிவாயம் அவர்களை காரியதரிசியாக திருப்பணிச் சபையினர் தேர்ந்தெடுத்தமை கேதீச்சரப்பெருமானின் திருவருள் என்றே அடியேன் நினைக்கின்றேன். அவருக்குக் கேதீச்சரப்பெருமான் நல்ல சுகத்தையும் பூரண ஆயுளையும் வழங்கி மேற்கொண்டுள்ள திருப்பணி வேலைகளையும் முற்றுவிக்க அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேகம் முடிந்ததும் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற இருக்கிறது. மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அன்பர்களும் சைவச் சங்கங்களும் **1111** ரூபா முன்கூட்டியே தேவஸ்தானத்தினருக்குச் செலுத்தித் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். அடுத்த ஆண்டு இதே தினத்தில் கொடியேற்றம் நிகழ்ந்து திருவிழாக்கள் நடைபெற இருக்கின்றன. அடுத்த ஆண்டு தேரோட்டமும் நடைபெற வேண்டும். அதற்காக இப்பொழுது தொடங்கியே தேர்த்திருப்பணியும் ஆரம்பித்துள்ளார்கள்.

ஐந்து தேர்கள் கட்டப்பட உள்ளன. தேர்களுக்கான மரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டுவிட்டன. ஐந்து தேர்

களும் செய்து முடிப்பதற்கு இரண்டு லட்ச ரூபா வரையில் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| சிவனுக்குரியதேர் | 31 | அடி உயரம் | 50,000 | ரூபா |
| அம்பாள் தேர் | 28 | அடி உயரம் | 40,000 | ரூபா |
| சுப்பிரமணியர்தேர் | 24 | அடி உயரம் | 30,000 | ரூபா |
| பிள்ளையார்தேர் | 23 | அடி உயரம் | 25,000 | ரூபா |
| சண்டிகேசுவரர்தேர் | 19 | அடி உயரம் | 15,000 | ரூபா |

இத்தேர்த் திருப்பணிகளைத் தமது பொறுப்பில் ஏற்றுக் கொண்டு செய்யக்கூடிய தனி நபர்களும் சங்கங்களும் சமய ஸ்தாபனங்களும் முன் வருதல் மிக நல்லதாகும். இத்தகைய திருப்பணிகளில் தமது பொருட் செல்வத்தைச் செலவு செய்து அதை அருட்செல்வமாக மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. விரும்பியோர் திருப்பணிச்சபை காரியதரிசியுடன் தொடர்பு கொண்டு திருப்பணிக்கு இயன்றமட்டும் உதவி புரிய வேண்டுகின்றோம்.

கும்பாபிஷேகம் முடிந்துவிட்டால், மண்டலாபிஷேகம் முடிந்து விட்டால் திருப்பணிகள் முடிந்துவிட்டன என்பது கருத்தல்ல. இதுவரை முடிந்த வேலைகள் குறைவாகவும் இனிமேல் முடிக்க இருக்கும் திருப்பணிகள் கூடுதலாகவும் உள்ளன என்பதைச் சைவப்பெருமக்கள் மனதில் கொள்வார்களாக. தேர்களுக்கு வேண்டிய மரங்கள் சேர்க்கப் பட்டுவிட்டாலும் அவற்றுக்கு வேண்டிய இரும்புகள் பெற்றுக் கொள்ள மாத்திரம் 50,000 ரூபா வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கட்டி முடிந்த இராஜகோபுரம் 66 அடி உயரமானது. அதுபோல வெளியிலே 66அடி உயரத்தில் இராஜகோபுரம் கட்டப்பட வேண்டும். திருச்சுற்றுமதிலும் குறைந்தது 12அடி உயரத்திலாவது கட்டப்பட வேண்டும். சுவாமி விமானம் 42½ அடி உயரத்திலும் அம்பாள் விமானம் 39 அடி உயரத்திலும் கட்டப்பட்டுள்ளன. அம்பாளுக்குரிய இராஜகோபுரம் 40 அடி உயரத்தில் கட்டப்படவேண்டும். பாலாவியின் மத்தியில் தீர்த்த மண்டபம் ஒன்று கட்டப் படவேண்டும். சுவாமிகளுக்குரிய அங்கிகள் நகைகள் தேவை. இப்போ ஐந்து காலப் பூஜைகள் மாத்திரமே

நடைபெற்று வருகிறது. இனிமேல் ஆறுகாலப் பூஜைநடைபெற வேண்டும். தினமும் பள்ளியறைவிழா நடைபெற வேண்டும். தினமும் அறுபத்துமூவர் விழா நடைபெறவேண்டும். பிச்சாடனர்விழா நடைபெற வேண்டும். பஞ்சபிரகாரத் திருவிழா நடைபெற வேண்டும். திருவிழாக்களுக்கேற்றவகையில் பலவித வாகனங்கள் தேவை.

தேவைகள் அதிகமானாலும் இருபது லட்சத்திற்கு மேற்பட்ட சைவர்கள் வாழும் ஈழத்தில் ஆளுக்கு ஒரு ரூபா வீதம் திருப்பணிச் சபையினருக்குக் கிடைக்கச் செய்தால் இருபது லட்சம்ரூபாய் இலகுவில் கிடைத்துவிடும் அல்லவா?

திருப்பணிச் சபையினர் உங்களை நாடி ஒரு ரூபாவிற்காக வரவேண்டும் என்று காத்திருக்காமல் உங்களோடு சேர்ந்தவர்களிடமும் பணத்தைப்பெற்று பின்வரும் விலாசங்களுக்குக் கிடைக்கச் செய்யலாம். குடும்பங்களாக, சமூகங்களாக, சங்கங்களாக, தெருக்களாக, ஊர்களாகச் சேர்ந்து அனுப்பி வைக்கலாம்.

திருக்கேதீச்வரத் திருப்பணிச்சபை,
75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு - 4.

பொருளாளர்,
திருக்கேதீச்வரத் திருப்பணிச்சபை,
திருக்கேதீச்வரம்.

வேதநாயகனே போற்றி வேள்வியின் முதலே போற்றி
வேதமான மறியாய் போற்றி விநாயக சனக போற்றி
காதில்வெண் குழையாய் போற்றி கங்கையஞ் சடையாய் போற்றி
மாதொருபாகம் வைத்த மாதோட்டக் கனியே போற்றி!

அந்தியிற் பொலிந்தவேணி அண்ணலே போற்றி மேலாம்
மந்திரத் துருவங்கொள்ளும் வானவா போற்றி யைந்தாம்
பந்தம தகற்றத் தோன்றும் பரகனே போற்றி யெங்கள்
மந்தியு மறியாச்சோலை மாதோட்ட மருந்தே போற்றி!

பொங்கரா வணிகளாகப் புனைந்தருள் புனிதா போற்றி
பங்கயன் முகுந்தன் காணாப் பரஞ்சுடர் வடிவே போற்றி
வெங்கய வுரிமேற் கொண்ட விமலநாயகனே போற்றி
மங்கலை மருங்கு வைத்த மாதோட்ட மணியே போற்றி!

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00

# சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

அன்புடையீர்!

அடிக்கடி விலை மாற்றமடையும் காகித விலை ஏற்றத்தினாலும், காகிதக் கட்டுப்பாட்டினாலும், முத்திரைகளின் விலை ஏற்றத்தினாலும் 1975-ம், 1976-ம் ஆண்டுகளின் ஆத்மஜோதிகளை இரண்டு மாதத்திற்கு ஒன்றாகவே நடத்தவேண்டி வந்தது. சந்தா நேயர்கள் பலருடைய வேண்டுகோளை அநுசரித்து அடுத்த ஆண்டில் ஆத்மஜோதியை மாதந்தோறும் வெளியிட உத்தேசித்துள்ளோம். வெளிநாடுகளுக்கு ஆத்மஜோதி ஒன்று அனுப்புவதற்கு முத்திரைச் செலவு -/60 சதமாகும். ஆகவே ஒரு வருடத்திற்கு முத்திரைச் செலவு 7-20 சதம் ஆகிறது. ஆத்மஜோதியின் ஆரம்ப காலத்தில் ஒரு றீம் கடதாசியின் விலை 5-00 ரூபாவாகும். இப்பொழுதோ அதன் விலை 124-00 ரூபாவாகும். விளம்பரங்கள் எதுவுமின்றியே கடந்த 28 ஆண்டுகளாக அன்பர்களின் சந்தாவின் உதவி கொண்டே நடைபெற்று வருவதை எல்லாரும் அறிவீர்கள்.

ஆகவே சந்தாவின் தொகையைப் பின்வருமாறு மாற்றம் செய்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | (இலங்கை) | 10-00 |
| தனிப்பிரதி | ,, | 1-00 |
| வருடச் சந்தா | (வெளிநாடுகளுக்கு) | 15-00 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
(ஸ்ரீலங்கா.)

இங்ஙனம்
ஆத்மஜோதி நிர்வாகிகள்.

அச்சிடுவிப்போர் :- ஆத்மஜோதி நிலையம்
அச்சிடுவோர் :- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:- 16-7-76.